வீராணம் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட குழாய்கள்

வினா எண். 30—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் திட்டத்திற்குத் தயாரிக்கப்பட்ட குழாய்கள் வேறு பணிக்குப் பயன்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: வீராணம் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட குழாய்களை, சாலைகளின் குறுக்கே கால்வாய்கள் கட்டுவதற்கும், மழைநீர் வடிகால்கள் கட்டுவதற்கும் பயன்படுத்துவது பற்றியும் மற்றும் அரசின் மற்ற துறைகளின் திட்டங்களுக்கும் பயன்படுத்த முடியுமா என்பதும் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, வீராணம் திட்டத்திற்கு ஆகியிருக்கக்கூடிய செலவு எவ்வளவு? நெய்வேலியிலிருந்து சென்னை மாநகருக்கு தண்ணீர் கொண்டுவர இந்தக் குழாய்கள் பயன்படுத்தப்படுமா? அல்லது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு தடவையில் ஒரு கேள்வியைக் கேளுங்கள். அப்படியானால்தான் பதில் அளிக்க வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கேள்வி, வீராணம் திட்டத்திற்குத் தயாரிக்கப்பட்ட குழாய்கள் வேறு பணிக்குப் பயன்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதாகும். அதற்காகவுள்ள பதிலை நான் சொல்லி விட்டேன். மொத்தம் 10586 எண்ணிக்கை கொண்ட குழாய்களைச் செய்தார்கள். 4500 குழாய்கள் கால்வாய்களில் புதைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை உபயோகப்படுத்துவதற்கு, நன்றாக பரிசோதனை செய்து நல்ல குழாய்கள் என்று தேர்ந்தெடுக்கப்படும் குழாய்களை மட்டுமே உபயோகப்படுத்த முடியும். வீராணம் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட 10586 குழாய்களில் சுமார் எண்ணாயிரம் குழாய்கள் அரசாங்க மாற்றுத் திட்டங்களுக்குப் பயன்படுத்த முடியும் என்று கருதப்படுகிறது. எனவே இவைகளை மிக மிக எச்சரிக்கையாகப் பரிசீலனை செய்து உபயோகப்படுத்த வேண்டியுள்ளது.

திரு. மி. வின்சென்ட்: வீராணம் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட குழாய்கள் வேகமாக வரும் தண்ணீர் அழுத்த சக்தியைத் தாங்குமளவிற்கு தரமுள்ளவை அல்ல என்று அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் அடங்கிய பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியும் மற்றும் உள்ள பொறியியல் வல்லுனர்களும் கருத்து தெரிவித்திருப்பது உண்மைதானா?

1983 சனவரி 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இவைகளை யெல்லாம் மனதில் வைத்துத்தான் நன்றாகப் பரிசீலனை செய்த பிறகு எந்த வகையில் எதெதற்கு பயன்படுத்தலாம் என்பதை இந்த அரசு முடிவு எடுக்கவிருக்கிறது.

திரு உ. சுப்பிரமணியன் : குடிநீருக்காகச் செய்யப்பட்ட குழாய்களை நாற்றம் எடுக்கும் கூவம் தண்ணீரில் மறைமுகமாக பூமிக்கடியில் உள்ள கழிவுநீரை வெளிப்படுத்த அவற்றை உபயோகப்படுத்த சாத்தியமிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

(விடை இல்லை.)

திரு.குமரி அனந்தன் : பேரவை துணைத் தலைவர் அவர்களே' வீராணம் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட இந்தக் குழாய்கள் சில செங்கல்பட்டும் சென்னையும் சேருகிற இடத்திலிருந்து ஐ.ஐ.டி. வரை புதைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழாய்கள்வழி பழனத்தம் ஏரியிலிருந்து தென் சென்னைக்கு தண்ணீர் கொண்டு வர பயன்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், 4500 கால்வாய்களில் புதைக்கப் பட்டிருக்கின்றன. எதற்காகப் புதைக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். எதற்காகப்புதைக்கப்பட்டதோ அதற்காக அதை உபயோகப்படுத்த முடியாது என்று நிரூபணமாகிவிட்டது. எனவே மாற்றுத் திட்டங்கள் எதற்காகவாவது எந்த வகையில் உபயோகப்படுத்த முடியும்—எக்கணாமிக்கலி யூஸ் செய்வதற்காக என்பதை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அதைத்தான், திரு அம்பிகாபதி அவர்கள் நல்ல கேள்வியாகக் கேட்டார்கள். அதற்குள்ள நல்ல பதிலையும் நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு, அம்பிகாபதி: இந்சமயம் அந்தக் குழாய்களிலே பல பேர்கள் குடும்பம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அது சொந்தமாக்கப்படுமா?

(விடை இல்லை.)

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் எழுப்பும் திட்டம்,

*வினா எண். 31—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—